திருவிடர்கழகப்பதிப்பு

சீர்காழி.

# திருவிடர்கழகம்.

அடக்கம்.

1. தமிழ்மொழியும் சிவநெறியும்.

(சுவாமி. விருதை, சிவஞானயோகிகளின் பெருஞ்சொல்)

2. தமிழர் தோன்மை, அகவல், ஷை. ஷை.

T. 6704

திருவிடர்கழக அமைச்சர்

சுவாமி, விருதை

சிவஞானயோகிகளால்

வெளியிடப்பட்டது.

மதுரைத் தமிழ்ச்சங்கம் பவர்ப் பிரசில்

அச்சியற்றப்பட்டது.

1913.

விலை அணா 2.

# திருவிடர்கழகம்.

## கழகத்தலைவர்

திருவன் ஹானரபில் K. சிதம்பரநாத முதலியாரவர்கள், சீர்காழி எஸ்டேட்,
சீர்காழி.

## அமைச்சர்.

மறைத்திருவன். சுவாமி, விருதை. சிவஞான யோகிகள்.
தமிழ்ப்பிரம சூத்திரம், யோகசூத்திரம், 5-வது ஜார்ஜ் மன்னிறை
முடிசூட்டு வாழ்த்துப்பா முதலிய நூல்களுக்காசிரியர்.
விருதுப்பட்டி. கோவிற்பட்டி.

## துணையமைச்சர்கள்.

திருவன் சித்தாந்தசரபம். பூவை. கல்யாணசுந்தரமுதலியாரவர்கள்,
அஷ்டாவதானம், சென்னை.
,, A. பால்வண்ணமுதலியாரவர்கள். தருமபுராதீனம்தக்ஷிணமண்டு, திருநெல்வேலி.
,, மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள், வித்யாபாநுப்பத்திராதிபர்,
மதுரை.

## உறுப்பினர்.

,, திவான்பகதூர். P. இராஜரத்தினமுதலியாரவர்கள், C. I. E.
சென்னபட்டினம்.
,, T. பொன்னம்பலம் பிள்ளையவர்கள், B. A. M. R A. S, ரிட்டைர்ட்
எக்சைசுகமிஷனர், சிவசைலம்.
,, V. R. அப்பாசாமிநாயுடுகாரு அவர்கள், ஜமீந்தார், இளவரசனேந்தல்.
,, P. N. கொண்டல்ராயசுவாமிநாயுடுகாரு அவர்கள், ஜமீந்தார்,
குருவிகுளம்.
,, ராய்பகதூர். P. தியாகராஜ செட்டியாரவர்கள், சென்னபட்டினம்.
,, S. T. சண்முகம் பிள்ளையவர்கள், எட்டயபுரம் திவான், எட்டயபுரம்
,, J. M. நல்லசாமிபிள்ளையவர்கள், B A., B.L., வக்கீல், மதுரை.
,, V. P. சுப்பிரமணியமுதலியாரவர்கள், G. B. V. C., சென்னை.
,, பண்டிட். D. சவரிராயன், M. R. A. S. திரிசிரபுரம்.
,, அரசஞ்சண்முகனார், தொல்காப்பியப்பாயிர விருத்தியுரையாசிரியர்,
சோழவந்தான்.
,, M. S. பூர்ணலிங்கம்பிள்ளையவர்கள், B.A., L.T., சென்னபட்டினம்.
,, R. பப்புப்பிள்ளையவர்கள், B.A , B.L., டிஸ்டிரிக்டுமுன்சீபு, திருவனந்தபுரம்.
,, T. V. கோலப்பன் பிள்ளையவர்கள், B.A., B.L., டிஸ்டிரிக்ட் முன்சீபு, அடூர், கொல்லம்.
,, C. அப்பாவு பிள்ளையவர்கள், L. M. & S., டாக்டர், திருநெல்வேலி
,, கவிராஜ. நெல்லையப்ப பிள்ளையவர்கள், திருநெல்வேலி.
,, கவிராஜ. ஈசுவரமூர்த்தியா பிள்ளையவர்கள், ஷை.
,, C. சடகோப பிள்ளையவர்கள், வக்கீல், ஷை.
,, N. பிரமநாயகம் பிள்ளையவர்கள், பேருருணி மிட்டாதார், ஷை.

மறைத்திருவன். சுவாமி, வேதாசலம் அவர்கள், பல்லாவரம்.
திருவன் T. S. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், பிளீடர், திருநெல்வேலி.

IV

# தமிழ்மொழியும் சிவநெறியும்.

13-10-12 மாலை $4\frac{1}{2}$ மணிமுதல் $6\frac{1}{2}$ மணிவரை.

திருவநந்தபுரம் புத்தன் சந்தையிலுள்ள சைவப்பிரகாசசபைக் கூட்டிடத்தில் திருவாங்கூர் பென்ஷன் ஹைக்கோர்ட்டு ஜட்ஜி திவான் பகதூர் கனம் A. கோவிந்தப்பிள்ளை யவர்கள் B. A. B. L. F. M. U. அக்கிராசனத்தின் கீழ்ச் சென்னைச் சைவசித்தாந்த மகாசமாஜத்தின் கௌரவப்பிரசங்கியாகிய மறைத்திருவன். சுவாமி. விருதை.சிவஞான யோகிகள் "தமிழ்மொழியும்சிவநெறியும்" என்ற விஷயமாய் ஒரு அரிய பிரசங்கமியற்றினர். அதன் சாரம்.

## (தமிழ்மறை வரலாறு.)

ஆங்கில நூலாசிரியரிற் பெரும்பாலார் இந்துமகாசமுத்திரத்தினுள்முழுகியிருக்கும் பூமியில் (Submerged land = Lemuria)தான் முதற்கண் மக்கட்பகுப்பார் தோன்றினரென்று கூறுகின்றனர். அதற்கேற்ப மக்கள் முதற்கண் ஒலிக்கக்கூடிய இயல் ஒலிகளே தமிழ் மொழியிலிருக்கின்றன. முன்னர் வடக்கட்குமரியாற்றுக்கும் தெற்கெல்லையாகிய பஃறுளியாற்றுக்கும் இடையே கிழமேல் நீண்டுகிடந்த 7000மைற் பரப்புள்ள நிலம் தமிழகம் என்னப்பட்டிருந்தது. அதில் தென்பகுதியில் தென்மதுரையிருந்தது. அதில் தலைச்சங்கம் கி. மு. 9990 முதல் 5550 வரையும், இடைச்சங்கம் கி. மு. 5550 முதல் 1850 வரையும், கடைச்சங்கம் கி. மு. 1850 முதல் கி. பி. 10 வரையும் இருந்ததாய்க்குறிக்கப்படுகின்றன. கி. பி. 90வரை இருந்ததாய்க் குறிப்பாருமுளர்.

மக்கள் தோன்றிய காலமுதற்றோன்றி வளர்ந்து நிலைபெற்றிருந்த தமிழ் மிகச்சீர்தேற்றமடைந்த தலைச்சங்க காலத்தில் அகத்தியர் தம்பெயரால் ஒரு பேரிலக்கண நூலியற்றினர். அக்கருத்தைக் கம்பராமாயணம் அகத்தியப்படலம் "என்றுமுள தென்றமி ழியம்பி

யிசை கொண்டான்" என்றகவி விளக்குகின்றது. ஆகவே இந்றைக்கு 11900 ஆண்டுகட்குமுன்னரே தமிழ் மிகச் சீர்தேற்றமடைந்திருந்ததாய்ப் புலப்படுகின்றது. டாக்டர் ஆப்பர்ட் (Dr. Oppert) புரொபசர், இ. எச். சேஸ் (Prof, E. H. Sayce) முதலிய ஆங்கில சரித்திராசிரியர் சின்ன ஆசியாவில் (Asia Minor) எருதூர் (Ur of Erudu) ஆட்சி கி. மு. 8000 ஆண்டுகட்கு நெடுநாள் முன்னரிருந்ததாயும், பின்னர் சாலடியூர் அல்லது சாலடியரூர் (Ur of Chaladea) ஆட்சி இருந்ததாயும், அதன்பின் அங்காடியர் (Accadians) பாபிலோனியர் (Babylonians) ஆட்சிகள் இருந்ததாயும் கூறுகின்றனர். எருதூர் சாலடியூர் என்ற பெயர்கள் தமிழாயிருத்தலானும், சாலடியர் அங்காடியர் மொழிகளில் தமிழ்ச்சொற்கள் மிகக்கலந்திருப்பதானும், இன்னும் பற்பல ஆதரவுகளானும் 10000 ஆண்டுகட்குமுன்னரே தமிழ்மொழி மெசபட்டோமியா என்ற சின்ன ஆசியாவிலும் பரவியிருந்ததாய் உறுதிப்படுகின்றது.

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரிகள் தமிழ்மொழியின் வரலாற்றில் 8000 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழ்க்கல்வெட்டைப்பற்றி யெழுதியிருக்கின்றனர்.

வடமொழி வான்மீகராமாயணத்தில் சீதையைப்பார்க்க அனுப்பப்பட்ட அநுமாருக்குத் தெற்கிலுள்ள பாண்டியன் ஆண்டிருந்த கவாடபுரத்தைப்பற்றிக் கூறப்பட்டிருத்தலானும், அக்காலத்திலிருந்த ஜமதக்கினி முனிவருக்குப் பாசுராமர், திரணதூமாக்கினி என் றிருமக்களிருந்தனர் என்றும், அவருள் திரணதூமாக்கினி என்ற தொல்காப்பியர் தொல்காப்பியமென்ற இலக்கண நூலியற்றினர் என்றும் பல சரித்திரங்கள் கூறலானும், இடைச்சங்கத்தின் பிற்பகுதியில் தொல்காப்பியர் இருந்ததாய்ப் புலப்படுகின்றது. ஜமதக்கினிமுனிவர்காலத்தை வேதகாலம் (Vedic Era) என்ற ஆங்கிலநூல் இற்றைக்கு 3558 ஆண்டு என்றும் வேறுசிலர் 4000 என்றும் கூறுகின்றனர்.

வைவசுவதமனு காலத்தில் ஒரு பிரளயமுண்டானதாயும், அவர் இட்டதெய்வம் மீன்வடிவாய் வந்து கூறியபடி கப்பலில் ஏறியிருந்து நீர்ப்பெருக்குக் குறைந்தபின் பிறங்கி வைகையாற்றின் கரையில் புது

நகர் இயற்றி ஆண்டதாயும், அவன் திராவிட அரசனென்றும், சுக்ல யஜுர்வேதத்தில் சதபதப்பிராமணம் அதன் உபப்பிரம்மணங்களாகிய பாரதம் பாகவதம் லிங்கபுராணம் முதலியவற்றால் வெளிப்படுகின்றது. அது இடைச்சங்கமிருந்த கவாடபுரம் கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த மீனக் கொடியுடைய முடத்திருமாறன் கடைச்சங்கமிருந்த மதுரை கண்ட சரித்திரமென்று கருதத்தக்கதாகின்றது. தலைச்சங்க இடைச்சங்கச் செய்திகள் இறையனார் அகப்பொருளுரை சிலப்பதிகாரவுரைகளிற் கூறப்பட்டுள்ளன.

மேற்கூறிப் போந்தவற்றால் 12000 ஆண்டுகளாய்த் தமிழ்நாடு சீர்தேற்றமடைந்திருந்ததாகத் தீர்மானப்படுகிறது.

தலைச்சங்கத்தில் மக்கட்குறுதிபயக்கும் நூல்களைத் திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளும் குன்றமெறிந்த முருகவேளும் அவர் மாணாக்கராகிய அகத்தியனார் கௌதமனார் வான்மீகனார் மார்க்கண்டனார் முதலிய சங்கப்புலவர்களும் இயற்றியருளினர். அவை இருக்கு எசுர் சாமம்போன்ற தலையாய வோத்துக்கள் எனத் தொல்காப்பியம் "அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்" என்ற சூத்திர உரையில் நச்சினார்க்கினியர் கூறியுள்ளார். முதலூழியில் தலைச்சங்கம் இருந்த தென்மதுரை கடல்கொள்ளப் பட்டமையால் இப்பொழுது முதற் சங்க நூல்களிற் சில சூத்திரங்களும் பாக்களும் ஆங்காங்கு உரைகளிற் காணப்படுகின்றன. இடைச்சங்க நூல்களும் பாக்களும் சிற்சில இன்னும் காணப்படுகின்றன. முற்காலத்து ஐந்திணைமாக்களும் அவ்வத்திணைக்குரிய புத்தேள்களின் வணக்கமும் அனைவர்க்கும் பொதுவாம் சிவவணக்கமும் இருந்து வந்தன. முற்காலத் திருவிடருள் சாதிவேற்றுமை இருக்கவில்லை. ஆனால் ஒப்பு அரும்பொருள் வினை யாழோர்கூட்டம் என மூன்றுவேட்டல்க ளிருந்தன.

1. ஒப்பு=பெண்கோடற் குலத்தான் வேண்டக் கொடுத்தல்.

2. அரும்பொருள்வினை=தலைவன் வல்லமை தெரிந்து எல்லவரு மறியத் தலைவி விரும்பி மாலையிடல். (இதுவே சுவயம் வரம்)

3. யாழோர் கூட்டம்=தலைவன் தலைவி இருவர் ஒத்தார் தாமே கூடுங் கூட்டம். (இதுவே காந்தர்வமணம்.

பிராமணாதி நான்கு வருணங்களும் ஆரிட முதலிய மணங்களும் ஆரியர் இந்நாட்டிற்கு வந்தபின் பவராற் கற்பிக்கப்பட்டன. அக்கருத்துக்களைக் கபிலரகவல் "நாற்குலச் சாதிஇந் நாட்டினீர் நாட்டினீர்" தொல்காப்பியம் "பொய்யும் பிசியும் புகுந்த பின்றை, யையர் வகுத்தனர் ஆரிட மென்ப" என்ற மேற்கோள்களுணர்த்தி நிற்கின்றன. வடமொழி ஆகமங்களில் சைவமறையோர்க்கு முன்னோராகிய அகத்தியர் கௌதமர் கௌசிகர் காசிபர் பரத்துவாசர் ஐவர்க்கும் சிவனார் சதாசிவமூர்த்தமாய் இருந்து சிவாகமங்களை உரைத்தனர். அவர் உலகுக்குரைத்தனர் என்று கூறப்படுவதையும், முதற் சங்கத்தில் சிவன் அகத்தியர் முதலியர்பால் தமிழ்த் தலையாலவோத்துக்கள் தோன்றினவென்பதையும் திருமந்திரம் "சதாசிவந் தத்துவ முத்தமிழ்வேதம்" என்று கூறினமையையும், வடமொழியாகமங்கள் பூஜாகாலங்களில் திருவிடகானஞ் செய்யத்தக்கது; விழாக்காலத்தில் திக்குப்பலியில் தமிழ்ப்பண்கள் ஓதத்தக்கன என்று கூறப்படுவதையும், அவ்வாறே இன்றும் தமிழ்மறைகள் ஓதப்படுவதையுங் கருதி நோக்கில் தமிழ்மறைகள் (ஆகமங்கள்) முதற்சங்ககால முதலிருந்து பண்களோடு ஓதப்பெற்று வந்தனவென்று நன்கு விளங்கும். தமிழ்மறை நீண்டகாலமாயுளது. தமிழ்நாட்டில் நுட்பமான மனவிரிவும் தத்துவநூல்களும் சிவஞானமும் என்று முள்ளன. சிவக்கடவுள் உலகனைத்துக்கும் பொதுவாந் தெய்வமேயாயினும் அவனை அறியுநெறியும், அவன் வணக்கமும் தமிழகத்தும் எனைத் தமிழ்நாட்டினுமே தொன்றுதொட் டுண்மையால் சிவன் "தென்னாடுடையான்" "பாண்டிநாடே பழம்பதியாகவும்" என்று சிறப்பித்துக் கூறப்படுகின்றன. ஆதலால் சிவநெறி என்னப்படும் சுத்தாத்வைத சைவ சித்தாந்தம் தமிழ்நாட்டுக்கும் அதில் வழங்கும் தமிழ்மொழிக்குமே தொன்றுதொட்டுரியது. இப்பொழுது அது தமிழினின்று ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படுவதுபோல முற்காலத்தில் பிறமொழிகளிலெழுதப்பட்டதன்றி அம்மொழிகளினே தோன்றியதன்று. இக் கருத்துக்களை உமாபதி சிவாசாரியர் திருமறைகண்ட புராணத்தில் "அருமறையைச் சிச்சிலிபண் டருந்தத் தேடு மதுபோலன் றிது வென்று முளதாம்" இது=தமிழ்மறை. கம்பநாட்டாழ்வார் இராமாயணம் அகத்தியப்படலத்தில்,

உழக்குமறைநாலினுமுயர்ந்துலகமோதும்
வழக்கினுமதிக்கவினினும்மரபினடி
நிழற்பொலிகணிச்சியணிநெற்றியுமிழ்செங்கட்
டழற்புரைசுடர்க்கடவுடந்ததமிழ்தந்தான்.

என்று தமிழ்மறையின் தொன்மையும் மேன்மையும் வழியுங் கூறப்பட்டன.

திருமந்திரம். அருளுடைமையின் ஞானம் வருதல். 2.

அவிழுமனமும்மாதியறிவுந்
தமிழ்மண்டலமைந்துந்தத்துவமாமே.

திருவாசகம் அகவல் 4-165.

"எந்நாட்டவர்க்கு மிறைவா போற்றி"

திருவாசகம். அகவல் 4-164.

"தென்னாடுடைய சிவனே போற்றி"

திருவா. அகவல் 2-90.

"தென்பாண்டி நாட்டானே"

திருவா. 2-118.

"பாண்டிநாடேபழம்பதியாகவும் பத்திசெய்யடியரைப் பரம்பரத்துய்ப்பவன்"

திருவா. திருவம்மானை 8-10.

"தண்ணார்தமிழளிக்குந்தண்பாண்டிநாட்டானை"

என்று எல்லாம்வல்ல பரம்பொருளைச் சிவன் என்ற பெயரால் வணங்கும் சைவநெறி தோன்றிய பழம்பதி பாண்டிநாடென்றும், அதில் நுட்பமான கருத்துகளும் தத்துவநூல்களும் தேவதேவன் ஞானமும் உளவென்றும் விளக்கப்பட்டது. இக்கருத்தை டாக்டர். ஜி. யூ. போப்பையர் (Dr. G. U. Pope. M. R. D. D.) அவர்கள் "சைவசித்தாந்தநூல் திருவிடர் அறிவின் சிறந்த விளைவு" = (The Saiva Siddhanta Philosophy is the choicest product of the Dravidian Intellect) என்று கூறிவற்புறுத்தினர்.

சிவன் என்ற சொல்லுக்குத் தமிழ்ப்பகுதி கூறில் வளர் என்ற பகுதி அத்தன்மையைக் குறிக்குங்கால் வளம் என்றும் அதையுடையானைக் குறிக்கும்பொழுது வளன் என்றும் ஆவதுபோலச் சிவண் என்ற பகுதி = பொருந்து என்ற பொருளுடைமையால் எங்கும் பொருந்தியிருத்தல் = (வியாபித்திருத்தல்) தன்மை சிவம் எனப் படுகின்றது. எங்கும் பொருந்தியிருப்பான் (சருவ வியாபகனுகிய பரமாத்மா) சிவன் என்று கூறப்படுகின்றனன்.

சுவேதாசுவதரம் 3-11 "ஸவ-ூமதஸ்ஹிவ:" "எங்கும் அடைந்துள்ளவன் சிவன்"

திருவாசகம் அகவல் 3-28. "அனைத்தனைத்தவ்வயினடைந்தோன்"

தலைச்சங்கத்துத் தோன்றிய தலையாய வோத்துக்கள் தென்மதுரை கடல்கொள்ளப்பட்ட முதலூழியிலும், எஞ்சியிருந்தவை இடைச்சங்கமிருந்த கவாடபுரம் கடல்கொள்ளப்பட்ட இரண்டாவதூழியிலும் கடலுண் முழுகினமையால், இப்போதுள்ள தமிழ்மறையாகிய தேவார திருவாசகமும் திருமந்திரமும் அவதாரமூர்த்திகள் வாயிலாய்வெளிப்போந்தன. அவற்றுள் தேவாரம் திருமுறைகண்ட அபயகுலசேகரசோழன் சிதம்பரந் திருமதிலுள் வைக்கப்பட்டிருந்தமை கண்டு பெரும்பகுதி கரையானுண்டிறந்தமைக்கு வருந்த "இக்காலத்துக்கு வேண்டியனவே எஞ்சியிருக்கின்றன" என்றெழுந்த வானிழல் மொழி இக்காலமனிதர்க்கறியற்பாலன வல்லாத பொருளுடையன கரையானுலுண்ணப்பட்டன வென்றுணர்த்தி நிற்கின்றன. அதுவே முதற்சங்க காலத்துத்தோன்றிய தலையாயவோத்துக்கள் கடல் கொள்ளப்பட்டமைக்குக் காரண மென்றுணரக் கிடந்தமை யோர்க.

வடமொழிமறை பலராற்கவரப்பட்டமையும், விண்டுமச்சாவதார மெடுத்துக்கொணர்ந்தமையும்,வேதங்கள் திரயியென்னப்பட்டுப் பின்னர் நான்காயினமையும் "அநந்தாவைவேதா:" "மறைகள் அளவில" என்னப்பட இப்பொழுது நான்கே யுண்மையையும், கற்பங்கள் தோறும் மீண்டு மீண்டும் மறைகள் தோன்றுமென்ற உபநிடதங்களின் கருத்தையும் உற்று நோக்கில் பிரளயத்தில் தமிழ்மறை வேறுபட்டமை யியல்பெனத் தோன்றும். திருமந்திரத்தில் சதாசிவமூர்த்தமாயிருந்து சிவன் தமிழ் வேதத்தை யுணர்த்தினர். என்றும்

("சதாசிவந்தத்துவ முத்தமிழ்வேதம்") சிவன் உமையார்க் கருளினர் என்றும், அதை நான்சொல்கின்றேன் என்றும் ("நீலாங்கமேனி நேரிழையாளொடு, மூலாங்கமாக மொழிந்த திருக்கூத்தின், சீலாங்கவேதத்தைச் செப்புவந்தேனே") மலரவன், இந்திரன் முதலிய தேவர்களும் தமிழ்மறைபாடி யாடினர் என்றும் (திரு. நா. தே. "நாவார்ந்த மறைபாடி நட்டமாடி நான்முகனு மிந்திரனு மாலும்போற்ற") நந்திகேசுரர் முதலிய சிவகணநாதரும் தமிழ்மறை கூறியதாயும், திருமூலரோடு நந்திப்புத்தேளிடம் தமிழ் மறைகற்று அருள்பெற்ற உடன் மாணக்கர் சிவயோகமாமுனி, பதஞ்சலி, புலிக்காலர், முன்னையர் எழுவர் என்றும், திருமூலர்பாற் றமிழ்மறைகற்ற மாணக்கர் மாலாங்கன் இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன் காலாங்கி கஞ்சமலைச் சித்தர் என்ற எழுவர் என்றும், தமிழ் மறை யாசிரியரும் வழியும் அதுகற்ற மாணக்கரும் ஆங்காங்குக் குறிக்கப்படுகின்றனர். மகேந்திரமலையில் சிவனர் ஆகமங்களை அருளிச்செய்தனர் என்று திருவாசகம், அகவல் 2. 9—10. "மன்னு மாமலை மகேந்திர மதனிற் சொன்ன வாகமந்தோற்று வித்தருளியும்" என்ற சுருதிவிளக்குகின்றது. மகேந்திரம் தமிழோங்கிவளர்ந்து வழங்கிய முதற் கழகமிருந்த நாட்டின் கண்ணுளதாதலால் அவண்டோன்றிய ஆகமமும் (சிவனர் அம்மைக்குரைத்த தமிழ் ஆகமத்தை யான் கூறுகின்றேனென்று திருமூலதேவர் குறித்தபடி) தமிழென்பதொருதலை.

அம்மலை கவாடபுரத்துக்குத் தெற்கிலுண்மையும், முதலூழியில் தென்மதுரை கடல்கொள்ளப்பட்டமையால் அநுமார் சென்றபொழுது அதன் ஒருபகுதியும் கடலுண் மூழ்கியிருந்தமையும் வான்மீகராமாயணம் கிட்கிந்தாகாண்டத்திற் கூறப்பட்டுள்ளது. தேவார திருவாசகத் தமிழ்மறையை உரைத்தோர் முருகக்கடவுள் அவதாரமாகிய திருஞானசம்பந்தர் நந்திகேசுரர் அவதாரமாகிய மாணிக்கவாசகர் முதலிய நால்வர். அத் தமிழ்மறையைச் சிவாலயமுனிவர் நாடோறும் ஓதத் திரட்டித் தந்தவர் அகத்தியனர்.

திருமூலநாயனர் சிவனர் அடியர்க் கறிவுறுத்தருளிய சிவாகமங்கள் அளவிறந்தனவென்றும், அவற்றுட்சிறந்தன இருபத்தெண்கோடி நூறுயிரம் என்றும், அவற்றின் பொருளைச்சுருக்கி யான் 3000

திருமந்திரங்களாகக் கூறுகின்றேன் என்றுஞ் சொல்லியிருக்கின்றனர். அவற்றின் சுருக்கம் இருபத்தெட் டாகமங்கள். இப்போதுள்ள காமிகாகமத்தில் முதற்கண் ஒவ்வோராகமத்தின் பாத்தொகை இஃதென்று கூறப்பட்டுளது. அக்கணக்கின்படி அக்காமிகாகமத்திலாவது வேறு ஆகமங்களிலாவது பாக்களிருக்கக் காண்கிலம். ஆதலால் அவை முன்னிருந்த தமிழ் ஆகமங்களின் தொகை என்றும், அவை வடமொழியி லெழுதப்பட்டபொழுது சுருக்கி யெழுதப்பட்டனவென்றும் கருதத்தக்கதாகின்றது. வடமொழி யாகமங்கள் திக்குப்பலியிலும் நித்திய பூஜாதிகளிலும் தமிழ்ப்பாக்களையும் தமிழ்ப் பண்களையும் ஓதப்பணித்தமையும் வடமொழி யாகமங்களில் ஆகமம் முதலிய சொற்களுக்கு ஆ = பசு, க = பதி, ம = பாசம், ஆதலால் பசுபதி பாசங்களை யுணர்த்தும் நூல் ஆகமம் எனப்படும்; என்றிவ்வாறு தமிழ்ப்பகுதிப்பொருள் கூறப்படலும், இக்கருத்தை நிலையுறுத்தும்.

இந்தியாவில் 8000, 10000 ஆண்டுகட்கு முந்திய பல சிவாலயங்களிருக்கின்றன. நெடுநாள் முந்தியிருந்து மண்ணுண் மறைந்திருந்த சிவாலயங்களும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அவை வடமொழி யாரியர் இந்நாட்டுக்கு வருதற்கு முந்தியகாலத்திற் கட்டப்பட்டனவென்பது தெளிவு; ஆதலால் அப்பொழுது சிவத்தளிகளியற்றல் வழிபடல் முதலியன தமிழாகமங்களின் வழித்தாய்ச் செய்யப்பட்டன வென்பதுந் தெளிவே. வேதம் ஆகமம் என்பன ஒரு பொருட் கிளவிகளாதலால் திருமூலதேவர் முன்னர்ச் "சீலாங்கவேதத்தைச் செப்பவந்தேனே" என்று சொல்லிப் பின்னர்ச் "சிந்தை செய்தாகமஞ் செப்பலுற்றேனே" என்று கூறினர்.

மேற்கூறிய கருத்தை,

அண்ணலருளாலருளுஞ்சிவாகமம்
எண்ணிலிருபத்தெண்கோடிநூறுயிரம்
விண்ணவரீசன்விழு முரைத்தனர்
நண்ணிநின்றப்பொருளேத்துவனானே.

என்ற திருமந்திரம் விளக்கினமைகாண்க.

இந்துமகாசமுத்திரத்தில் மூழ்கிய இடத்திற் றோன்றியிருந்து பல்கிப்பெருகிய மனிதரி லொருதொகுதி மெசபட்டோமியாவிற் சென்றிருந்து பெருகிப் பல பகுதிகள் வெவ்வேறிடங்களிற் செல்ல மற்றொருபகுதி இலத்தின் கிரீக்கு, எபிரேயம் பகுதிகளாய்ப் பிரிந்து போக எஞ்சிய வடமொழி யாரியர் மத்திய் ஆசியா மேற்குப்பகுதி யிலுள்ள துருக்கித்தானத்திற் றங்கிப் பின்னர்க் கைபர்க் கணவாய் வழியாய் இந்தியாவுட் புகுந்தனர்.

அவர் இந்தியாவுக்கு வந்து 5000 ஆண்டுகளாகின்றனவென்று ஆங்கில ஆசிரியர் பலர் கூறுகின்றனர். வேறுசிலர் சில நூற்றாண்டுக ளுயர்த்திக் கூறுகின்றனர். மற்றொருவர் 6000 ஆண்டுகளென்று கணக்கிடுகின்றனர். இருக்கு முதலிய மூன்று வேதங்கள் கி. மு. 3101 முதற்றொடங்கிப் பல இருடிகளால் 2500 ஆண்டுவரை யெழு தப்பட்டனவென வேதகாலம் (The Vedic Era) முதலிய நூல்கள் கூறுகின்றன. புரோபசர் எச். ஜாகோபி (Pro. H. Jacobi) என்பவர் வேதத்திற் குறிக்கப்படும் கிரஹநிலையை ஆதரவாய்க்கொண்டு கி. மு. 4500க்கும் 2500க்கும் இடையிற்றோன்றிய தென்கின்றனர். புரோப சர் பா. க. திலகரும் அவ்வாறே கூறுகின்றனர். தமிழ் அறிவு நூல் களின் கருத்துக்களையும் சிவன்காதைகளையும் தமிழர் ஒழுக்க வழக்கங் களையும் தமிழ்நாட்டுக் காதைகளையும் ஓர்ந்த வடமொழிவல்ல அறி ஞர் வடமொழிவேதம் ஆகமம் புராணம் இதிகாசங்களை வரைந்தனர். அன்னவர் மெய்ஞ்ஞானமும் சிவானுபூதியுமுடைய உத்தமராதலின் அவைகளுஞ்சிறந்த பிரமாணங்களேயாயின. பின்னர்த்தோன்றிய திருஞானசம்பந்தர் முதலிய சமயகுரவர் நால்வரும் வடமொழிவேதம் ஆகமம் தமிழ்மறையாகமங்கள் ஆகிய இருபகுதிகளையும் தழுவிய சமரசஞான சித்தாந்திகளாதலால் அவர்கள் சித்தாந்தம் வைதீக சுத் தாத்வைத சைவசித்தாந்த மெனப்படுகிறது. நாமும் அதைத் தழு வினவர்களாதலால் நமக்கும் வடமொழி தென்மொழி வேதாகமங்கள் அளவைகளாயின. தமிழகத்தில் தொன்று தொட்டுள்ள முல்லைத் திணைத்தெய்வமாகிய திருமால்மீது ஆழ்வார்களியற்றிய நாலாயிரப் பிரபந்தமாகிய தமிழ்வேதமும் ஸ்ரீ வைஷ்ணவப் பிராமணராலோதப் பெற்று வருகின்றது. தேவாரம்—"அரியலாற்றேவியில்லை யையனை யாறனார்க்கே" என்றபடி வைஷ்ணவம் தேவி விஷயமாமன்றி உண்மை

யில் வேறுபட்டதன்று சிவசத்திகளுக்கு வேற்றுமையின்மையால். விள்ளல்=மலர்தல்=விரிதல் ஆதலால் விண்டு என்பது விள் என்ற பகுதியடியாய்ப் பிறந்து எங்கும் பரவி (விரிந்து) உள்ளபொருளைக் குறித்து நிற்கின்றது. சிவன் விண்டு என்ற சொற்கள் பொருளான் ஒற்றுமையுடைமை காண்க.

சாந்தோக்கியம் பிரபா. 5. கண்டம் 3.

"𑌯𑌥𑍇𑌯𑌂 𑌨 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍 𑌤𑍍𑌵𑌤𑍍𑌤𑌃 𑌪𑍁𑌰𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌨𑍍 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿"

என்ற சுருதி முன்னர் ஆரியப்பிராமணர் அறியாதிருந்த ஞானத்தைப் பாஞ்சாலநாடாண்டிருந்த தமிழரசனுகிய பிரவாகநனைசவலி கௌதமருக் குபதேசித்தனனென்றுணர்த்தலும், வடமொழி வேதங்களில் தமிழ்முனியாகிய அகத்தியர் சரித்திரம் மிகக்காணப்படலும், அகத்தியர் மனைவி வேதத்திற் சில பகுதிக்கு ஆக்கியாளாயிருத்தலும், பிரயளங்கூறும் வேதம் சதசதப் பிராமணத்திலும், அதற்குப்பபிருமணமாகிய பாரதம், பாகவதம், லிங்கபுராண முதலியவற்றிலும் கூறப்படும் மநு திராவிடராஜன் என்னப்படலும், "மநுமொழிந்ததெல்லாமருந்து" = (𑌯𑌦𑍍𑌵𑍈 𑌕𑌿𑌂𑌚 𑌮𑌨𑍁𑌰𑌵𑌦𑌤𑍍 𑌤𑌦𑍍𑌭𑍇𑌷𑌜𑌮𑍍) என்று வேதத்தில் கூறப்படலும், மணலூர் புரம் முதலிய தமிழ்ப்பெயர்கள் வடமொழிப்பாரத முதலிய நூல்களில் காணப்படலும், மந்திரபாகங்களில் தமிழ்க்குரிய ளகரங் காணப்படலும், வடவாரியர்க்குச் சொந்தமான எழுத்தின்மையால் அவர் இந்தியாவுக்கு வந்தபின்பியற்றிய நூல்கள் நெடுநாள் எழுதா மறை எனப்பட்டுப் பின்னர்த் தமிழ்ப் பழைய எழுத்தாகிய வட்டவெழுத்திலிருந்து நாகரவெழுத்தையும், புதிய எழுத்தாகிய தமிழெழுத்திலிருந்து கிரந்த எழுத்தையும் படைத்து அவற்றில் வடமொழி நூல்களை எழுதியிருத்தலும் தமிழ்நூற்றொன்மையையும் மேன்மையையும் நன்குவிளக்கும்.

தமிழ்த் தொன்மையைப்பற்றி இந்திய புத்தசரித்திரம் (Buddhist India) என்ற ஆங்கில நூலாசிரியர் கூறியனவும், வி.கோ. சூரியநாராயண சாஸ்திரிகள் தமிழ்மொழிவரலாற்றில் வடமொழிக்கலப்பு என்ற அதிகாரத்தில் பல அரிய நுண்பொருள்கள் தென்மொழியி

னின்று வடமொழிக்கு வந்தமையைப்பற்றிக் கூறியிருத்தலும் இதனை யாதரிக்கும். சுமார் 3000-ஆண்டுகட்கு முன்னர்ப் பாஸமகாகவியா லியற்றப்பட்டதென்று கூறப்படும் நாடகங்களுள் முக்கியமான ஸ்வப்ன வாஸவதத்தம் என்பது தமிழாசனுகிய உதயணன்கானதயை ஆதாரமாய்க்கொண்டு வத்ஸராஜன் என்ற பெயர்தந்தெழுதப்பட்டுளது. சங்கீதரத்னுகரத்தில் தமிழ்த் தேவாரப்பண்கள் எடுக்கப்பட்டுள்ளன. தமிழ்ப் பெரியபுராணம் வடமொழியிற் பெயர்க்கப்பட்டுள்ளது. இவை முதலியன அவர் கூற்றுக்களுக் குதாரணங்களாம்.

திருமூலர். "செப்புஞ்சிவாகமமென்னுமப்பேர்பெற்று
அப்படிநல்குமருணந்திதாள்பெற்றுத்
தப்பிலாமன்றிற்றனிக்கூத்துக்கண்டபின்
ஒப்பிலெழுபதுகோடியுகமிருந்தேனே."

என்று கூறுகின்றனர். யுகத்தை ஓராண்டாகக் கொள்ளினும் எழுபது கோடி ஆண்டாகின்றன. ஆதலால் சிவநெறிமுதற்கண்ணுலகிற்றோன்றிய காலம் வரையறுக்கக்கூடாததாயிருக்கின்றது. மிகச் சுருங்கிய தற்காலக் கணக்கை வைத்துநோக்கில் மேற்கூறிப் போந்தவற்றால் 12000-ஆண்டுகட்கு நெடுநாண் முன்னரே தமிழ் சிர்தேற்றமடைந்திருந்ததென்றும் தலைச்சங்ககாலந்துவக்கிச் சைவசமயமிருக்கிறதென்றும், சைவசமயத்துக்குப் பாண்டிநாடே பழம்பதியென்றும், இச்சைவம் தமிழினின்றே ஏனையமொழிகளுக்குச் சென்றதென்றும் விளங்குகின்றது.

முன்னர்ச் சென்னைக்கவர்னராயிருந்த சர் கிரான்ட்டப்பிரபு ஒருநாட் பிரசங்கத்தில் "தமிழின் தொன்மையின்முன் ஆரியர்களுடைய தொன்மை சற்றுநேரத்திற்குமுன் வந்த ரூட்டர்த்தந்தியொக்கும்." என்றதும் சென்னை ஐகோர்ட் ஜட்ஜ் திவான் பகதூர் பிரம ஸ்ரீ சதாசிவையரவர்கள் சென்னை மெய்கண்ட சந்தானசபையிற்செய்த பிரசங்கமும் இக்கருத்தை ஆதரிக்கும்.

## சைவசமயக்கருத்து.

நமது இந்திரியங்களுக்கும் அறிவுக்கும் புலப்படும் பொருள்கள் மண், நீர், தீ, காற்று, விண், கதிரவன், மதி, ஆவி, என எட்டுப்பொ

ருள்கள். அவற்றில்முன்னேழும் அசேதனமும் ஆவி சேதனமுமாம். எல்லா உலகங்களும் கதிர்மதிகளும்பௌதிகவடிவங்கள். உலகத்துள்ள இயங்கியற்பொருள் நிலையியற்பொருள்களின் வியப்பான அமைப்புகளையும், ஒன்றுக்கொன்று பயன்படு நலத்தையும் உற்று நோக்குவார்க்கு அவற்றை முற்றுமோர்ந்தியற்றுவா னொருவ னுள னென்று தோன்றுமற்போகாது. புகைகண்டுழி நெருப்புண்டென உணர்தல்போல அதிவிசித்திரமான உலகப்படைப்பை நோக்குழிப்படைப்பான் ஒருவன் உளன் என்றுகருதலளவையாற் கொள்ளப்படுகின்றது. ஆங்கிலதத்துவ சாத்திரியாகிய ஹெர்பர்ட் ஸ்பென்சரும் (Herbert Spencer)அறிவுள்ள மூலகாரணமொன்றுண்மை மெய் என்கின்றனர். கடவுள்எல்லாவல்லமையும் எல்லா அறிவுமுடையர் எங்கும்நிறைந்தவரென்பது கொஞ்சங்குறைய எல்லா ஆத்திகரு மொப்பிய வுண்மை. வியாப்பியப்பொருள்களில்லாவிடில் வியாபகனுங்கிடையாது. ஆதலால் சேதனு சேதனப்பிரபஞ்சங்கள் வியாப்பியமும் கடவுள் வியாபகனுமாம்.

எங்கும் நிறைந்தவனாகிய சிவன்பதி. அவனை அளவைகளானும் அறிவானும் அறியும் சேதனன் ஆன்மா. அவர் ஆணவம், மாயை, கன்மமென்னும் மும்மலங்களில் 1. 2. 3. மலங்களுடைமையால் முத்திறப்படுவர். ஆன்மாக்கள் கன்ம வேற்றுமையால் பற்பல பிறப்பிறப்புகளடைந்து சுழலுமெண்ணிறந்தவர். ஆவிகளின் கன்மங்களுக்கேற்பத் தனுகரண புவன போகங்களாயுதவுவது மாயை, அல்லது பாசம். அது, சுத்தமாயை அசுத்தமாயை என்றிருவகைப்படும். மேற்கூறிய கடவுள், ஆவி, மாயை, என்ற முப்பொருள்களும் அநாதி நித்யம். கடவுள் எல்லா ஞானமும் எல்லாவல்லமையும் எல்லா நல்ல பண்புகளும் இரக்கமும் உடையன். இயல்பாகவே பாசங்களின் நீங்கிய இன்பவடிவன். எங்கும் நிறைந்த ஒருவன். ஆன்மாக்கள் சேதனராயினும் செம்பிற் களிம்புபோன்றுள்ள ஆணவமலத்தால் இச்சாஞானக்கிரியாசத்திகள் மறைக்கப்பட்டு இருட்டுவீட்டிற் குருட்டுக் குழவிபோல அநாதி கேவலத்திற் கிடக்கின்றன. அவ் வான்மாக்களுக்கு இறைவன் அவற்றின் இச்சை கன்மங்களுக்குரிய தனுகரண புவன போகங்கள் தந்து அதனுல் அறிவு முதிர்ந்து பரிபாகமெய்தி வீடுபெற்றுத் தன்னைப்போலப் பேரின்பநுகர்ந்திருக்கச் செய்கின்றனன்.

அவனொருவனே சர்வலோகங்களையும் படைத்தளித்தழிப்பவன். உலகில் இல்வழக்கினர் (நாத்திகர்) நான்கு பூதங்களின் சேர்க்கையானும் அவற்றின் மிகுதி குறைவானும் உலகம் தோற்றம், நிலை, இறுதியடைகின்றன வென்கின்றனர். பிரதான காரணவாதிகள் பிரதானமாகிய மாயையே ஜெகத்காரண மென்கின்றனர். காலவாதிகள், காலமே காரணமென்கின்றனர். சுபாவவாதிகள் இயற்கையே காரணமென்கின்றனர். அவையனைத்துஞ் சடமாகையால் அவற்றுக்கு அறிந்தியற்றுங் காரணத்தன்மை பொருந்தாது. அறிவுள்ள ஜீவான்மாவைக் காரணமென்பதும் தனக்கெனச் சுவாதீனமின்றிச் சுகதுக்கமடைதல், தன் எண்ணத்தாற் பிறப்பிறப்படையாமை, உலகிலொன்றைப் படைத்தல் காத்தல் அழித்தல் வன்மை தனக்கில்லாமை, சிற்றறிவு சிறுதொழில் சிறுதன்மையுடைமை முதலியவற்றானும் பிறவற்றானும் பொருந்தாது. சர்வ ஆன்மகோடிகளையும் அறிவுக்கு அறிவாய் நின்றறிவித்தியக்கும் அந்தரியாமியாகிய ஒருவனே தெய்வம். அவனைப் பற்பலமதத்தரும் மொழியாளரும் வெவ்வேறு பெயராற் கூறுகின்றனர். பகலைச்செய்யும் கதிரவனை வடமொழியார் சூரியனென்றும், ஆங்கிலேயர் சன் (Sun) என்றும், இந்துஸ்தானியார் சூரஜ் என்றும், இலத்தீனர் சோலர் (Solar) என்றும் இன்னும் பல மொழியாளர் பலவாறு கூறினும் குறிக்கப்படும் பொருளொன்றேயாவதுபோல எம்மதத்தவர் எப்பெயராற் றெய்வத்தைக் கூறினும் குறிக்கப்படுதெய்வ மொன்றேயாம். ஒரு பொருளின் ஒவ்வொரு பெயரும் அப்பொருளின் இயல்பிலொன்றையே குறிக்கின்றமைபோலக் கடவுள் ஒவ்வொரு நாமமும் அவன் கல்யாண குணங்களிலொன்றையே குறிக்கின்றது.

சுவே. 4. 19.

யஸ்ய நாம மஹத்யஶ: । எவன் பெயர் (அவன்) பெரிய புகழ்

**கூர்மபுராணம்.**

“ஸாங்க்யவர்த்ஸ்யஸாங்க்யாச விஷ்ணோர்நச்யதே ।
ஸர்வஜ்ஞஸ்ஸர்வவிஜ்ஞாநாத்ஸர்வதோபிதிஸ்ம்ருத: ॥

(இ - ள்.) எல்லாவற்றையும் அழிப்பதால் அரன் என்றும், வியாபிப்பதால் விஷ்ணுவென்றும், எல்லாவற்றையும் அறிவதால் சர்வக்ஞன் என்றும், ஓம்புதலால் ஓம் என்றும் கூறப்படுகின்றனன்.

பிள்ளைகள் நெடுங்கணக்குப்படித்துப் பின்னர் முதற்பாடம் இரண்டாம் பாடம் முதலிய ஏடுகள்படித்து மெட்ரிக்குலேஷன் பரீக்ஷைக்குரிய பாடங்கள் படித்துத் தேறிப் பின்னர் பி. ஏ. எம். ஏ. முதலிய பரீக்ஷைகளுக்குப் படித்துத்தேறி ஆசிரியராதல்போல வெவ்வேறு கீழ்ப்படி மதங்களைப்பற்றி அவ்வவற்றிற் பெறத்தக்க அறிவடைந்து பலஜன்மங்களில் சித்தசுத்தியடைந்து சிவஞானமெய்தி முக்தியடைவர்.

எம். ஏ. பரீக்ஷையிற் றேறுதற்கு ஒவ்வொரு வகுப்புப் பாடங்களும் எப்படித் தள்ளத்தகாத அத்தியாவசியமும் பயன்படத்தக்கனவுமாகுமோ அப்படியே ஒவ்வொரு மதங்களாகிய சோபான மார்க்கங்களும் தள்ளத்தகாத பயனுடையனவேயாம். ஆதலால் கன்மபரிபாகத்தால் பலதிறப்பட்ட அநந்தகோடி ஜீவர்களுக்குபயோகமாம்படி உலகிற் பல்லாயிர மதங்களிருக்கப்பரமன் கற்பித்திருக்கின்றனன். ஆதலால் ஒருமதமும் எள்ளத்தக்கதன்றென்று கருதி அறிவதே அறிஞர் முடிவு. சைவசித்தாந்தத்தின் உண்மைத்துணிவுமஃதே.

திரு. நா. தேவாரம்.

விரிவிலா அறிவினார்கள்வேறொருசமயஞ்செய்தே
எரிவினாற்சொன்னாரேனுமெம்பிராற்கேற்றதாகும்.

சிவஞானசித்தியார்.

யாதொருதெய்வங்கொண்டீரத்தெய்வமாகியாங்கே
மாதொருபாகனாரேவந்தருள்புரிவர்.

சாந்தோக்கியம்.

"யதாயதோபாஸதே ததேவபவதி" "எப்படி எப்படி யுபாசிக்கின்றனன் அப்படியே ஆகின்றனன்."

திருவாய்மொழி "தமருவந்த தெவ்வுருவவ் வுருவந்தானாய்த்—தமருவந்தபேர் ரப்பேர்—தமருவந்த—தெவ்வண்ணஞ் சிந்திப்பதியை யாதிருப்பரேல்—அவ்வண்ண மகிழ்வோனும்."

என்ற சுருதிகளுமவ்வுண்மையை வற்புறுத்துகின்றன. ஆதலால் மதத்துவேஷங்களை யொழித்தல் நமதுகடமையேயாம்.

எக்காலத்தும் எவ்விடத்தும் எந்தத்தொழில் செய்யும் பொழுதும் பரமேசுரனைத் தியானித்தலும் எல்லா உயிர்களையும் தன்னுயிர் போலெண்ணி அவைகட்கு நன்மைபுரிதலும் தீமைசெய்யாமையும் சைவர்க்கு இன்றியமையாத செயல்களாம். படித்தவர்களும் பெரிய உத்தியோகமுஞ் செல்வமு முடையவர்களுந்தாம் கடவுளை வணங்கலாம் எளியவர்களுக்குப் போதுமான அவகாசமின்மையால் அவர் கடவுள் தியானஞ்செய்ய முடியாதென்றெண்ணற்க. மனஉழைப்புடையரைக்காட்டிலும் தேக உழைப்புடைய வேலைக்காரர்க்கு அவகாசமுண்டு. உதாரணமாக மூட்டை சுமப்பவன் எனது பாவச்சுமை, அஞ்ஞானச்சுமைகளை ஒழித்தருளவேண்டுமென்று தியானித்துக்கொண்டு செல்லலாம்: அதனால் தெய்வபக்தியுண்டாவதோடு பாரந்தெரியாமையுமுண்டாம். மண்வெட்டுபவன் இவ்வாறு என் ஆணவம் தீயகன்மங்களை வெட்டியொழிக்க வேண்டுமென்று தியானித்துக்கொண்டு வெட்டலாம். குப்பைதூர்க்கிறவன் இவ்வாறு என் பாசக்குப்பைகளை விலக்கவேண்டுமென்றும், கரிச்சட்டிகழுவுபவன் இவ்வாறு என் அஞ்ஞானக்கரியைக் கழுவவேண்டு மென்றும் கடவுளைத் தியானிக்கலாம். மனஉழைப்புடையவன் அவன் தொழிலை நிறுத்தி யொருதியானத்தில் மனதைச் செலுத்தவேண்டும். உடல்வேலைசெய்பவன் வேலைசெய்யும் பொழுதே மனதில் கடவுளைத்தியானிக்கலாம்.

சிவன் எல்லா உயிர்களினும் நிறைந்த அந்தரியாமியாதலால் உயிர்களனைத்தும் அவன்கோவில் ஆதலால் அவன் வீற்றிருக்குங் கோவிலுக்கு எவ்வாற்றானும் இடுக்கண் விளைத்தல்கூடாது. இக்கருத்தானே பிறவுயிர்கொன் றூன்தின்னலைச் சைவநெறிமறுக்கின்றது.

## திருநீறு.

திருநீறு, கண்டி இரண்டும் சிவசின்னங்களென்னப்படுகின்றன. சர்வபிரபஞ்சங்களையும் இறுதியில் சங்கரித்து எல்லாமொடுங்கிய காலத்தில் எஞ்சிநிற்பவன் சிவன் ஒருவனே.

ஆதலால் திருநீறு சர்வசங்காரக்கடவுளை நினைப்பூட்டுகின்றது. திரிபுண்டரமாகத் திருநீறிடும்பொழுது மும்மலங்களையும் நீற்றி யிவ்வாறு நீறுக்கவேண்டுமென்று நினைந்து ஐந்தெழுத்தை யோதி முறைப்படி திருநீறிடவேண்டும்

திருநீறு மும்மலங்களையு மொழித்து ஆயுளும் செல்வமும் அறிவும் கொடுக்குந்தன்மையுடையது. வைத்தியமுறையாய் நோக்கில் விபூதி உத்தூளநம், அவகுண்டநம், (நீர்கலந்து உடலிற் பூசல்) திரிபுண்டரம் என்ற தாரணங்கள் உடம்பிற்படும் நோய்ச்சிற்றுயிர் தொற்றுநோய்ச்சிற்றுயிர்களையும் கொல்லும். உட்கொள்ளும் பூதி வாயினுட் சென்ற புழுக்களைக்கொல்லும், புழுக்களால் உண்டாம் நோய்கள்வாராமற்காக்கும். உதாரணமாக வித்துக்கள் புழுக்காமல் அல்லது உளுக்காமல் சாம்பல் சேர்த்துவைத்தலும் புழு அசுகணி உண்டாகிய அவரை, புடல், பீர்க்கு முதலிய படர்கொடிகளில் சாம்பல் தெளித்தலும் அவை நீங்கி நல்லபலன்றரலும், வாராமற் காத்தற்கும், வந்தபின் நீக்கற்கும் சான்றுகளாம்.

## கண்டிகை.

ருத்திராக்ஷம் மகா உருத்திரனது கண்போன்றது. அவற்றை யணிந்துகொள்வதுநம்பால்அவனருட்கண் பெறவேண்டுமென்பதைக் குறிக்கின்றது. கண்டியின் தாரணத்தால் தேகசுகமும் நல்லறிவும் செல்வமும் சிவனருளுமுண்டாம். வைத்திய முறையாகநோக்கில் கண்டியில் உயிர்ச்சாரசக்தி (Human Magnetism) உளதால் அதை அணிவார்க்கு உயிர்ச்சாரசக்தி மிகுந்து தேகத்துக்கும் மூளைக்கும் பலமுண்டாகி ஆயுளும் நீளும்; இரத்தசுத்தியும் நோய்நீக்கமும் உண்டாம். உதாரணமாகப் பலவிடங்களில் மகம்மதியரும், கிறித்தவரும் கூடச் சிலநோய்கள் வாராமற்காத்தற்கும் நீக்கற்கும் ருத்திராக்ஷத்தை ரக்ஷாபந்தனம்போலக் குழந்தைகளுக்குக் கட்டிவருகின்றனர்: நல்லபலனையுமடைகின்றனர். வைத்தியர் ஜன்னி நாவறட்சி மயக்க முதலியவைகளுக்கு அதனுல் கண்டாவிழ்தஞ்செய்து கொடுத்து நல்லகுணங் காண்கின்றனர்.

இவ்விரு தாரணங்களுடையாரைக் காணுந்தோறும் அவற்றைத் தரிக்குந் தோறும் தெய்வநினைப்புண்டாவதும் பாராட்டத்தக்கதே.

## ஐந்தெழுத்து.

இச்சைவசமயம் ஒரு ஜாதியார் அல்லது தேசத்தாருக்குரிய தன்று. மனித ஜாதியார் அனைவர்க்கும் பொது. அருபத்து மூன்று நாயன்மார்களின் வகுப்புக்களைக் கருதினால் அவ்வுண்மை விளங்கும். கடவுளை அடையும் நன்னெறிகள் சிலர்க்குரியன வென்றும் சிலர்க் குரியனவன்றென்றும் கூறல் எவ்வளவறியாமை. கடவுட்குரிய அள வில் பெயர்களில் சிவன் என்பது எங்கும் நிறைந்தவன் என்று குறிக் கின்றது.

அது நெடுநாட் பலரால் தழுவப்படலாலும் தென்மொழி வட மொழி மறையாகமங்களிலும், வழக்கிலும் சிறந்து வழங்கப்படுகின் றது. பிற்காலத்து நமச்சிவாயன் என்ற பெயரும் வழங்கியது. அப் பெயர்களிரண்டும் ஐந்தெழுத்தென்றே கொள்ளப்படுகின்றன.

### தேவாரம்.

"பாத்திரஞ்சிவமென்று பணிதிரேல்"
"வேதநான்கினு மெய்ப்பொருளாவது
நாத ஞம நமச்சிவாயவே"

என்ற சுருதிகள் அக்கருத்தை விளக்குகின்றன.

## அடியர்வணக்கம்.

மக்கள் அனைவரும் சிவபிரான் பிள்ளைகள் ஆதலா லவ்வனைவரை யும் நாம் உடன் பிறந்தாராய்க் கொள்ளல் வேண்டும். அவருள்ளும் சிவபக்தர் யாவராயினும் அவர்பால் நாம் மிக்க அன்புசெலுத்த வேண் டும். இக்கருத்தை,

### திரு. நா. தேவாரம்.

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
　　தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவா ரவர்செல்வ மதிப்போ மல்லோ
　　மாதேவர்க் கேகாந்த ரல்லராகின்

அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயரா
யாவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராயி
னவர்கண்டீர் யாம்வணங்குங் கடவுளாரே.

முண்டகோபநிஷத்.

"சண்டாளோபி யதி சிவ இதி வாசம் வதேத்
தேந ஸஹ ஸம்வதேத் தேந ஸஹ ஸம்வஸேத்
தேந ஸஹ புஞ்ஜீத"

(இதன் பொருள்) சண்டாளனாயினும் சிவனென்ற சொல்லைச் சொல்வானானால் அவனோடு பேசுக. அவனோடு இருப்பாயாக. அவனோடு உண்பாயாக. என்றல் முதலிய சுருதிகள் விளக்குகின்றன.

இதுகாறுங் கூறியவாற்றால் சைவசமயம் தமிழ் நாட்டில் 12000 ஆண்டுகட்கு முன்னரே தோன்றியுளதென்றும், அது எல்லாருக்கும் பொதுவாம் ஞானமதமென்றும், உலகு உயிர் தெய்வம் என்று முப்பொருள்களுள, உயிர்கள் ஜாதி மத வேற்றுமையின்றி அவர் புரியும் நன்மை தீமை உபாசனைகளுக்குரிய பலனை அடைவர், நாம் கடவுளை நம்பி நன்னெறியிலொழுகி அவனை வழிபடல் வேண்டும், தன்னுயிர்போ லெவ்வுயிரினிடத்தும் அன்புசெலுத்தவேண்டும், விபூதி ருத்திராக்ஷ தாரணம் பஞ்சாக்ஷரஜெபம் ஜீவகாருண்யம் சைவத்துக்கு முக்கிய சாதனங்கள் என்றும் நன்கு விளங்குகின்றது.

இன்று சிவபிரான் பிரபாவங்களை யான் சொல்லவும் நீங்கள் கேட்கவும் அருளிய திருவருளைப் பன்முறை வணங்குகின்றேன்.

நம:பார்வதீபதயே

இங்ஙனம்

**ஒருசைவன்.**

# திருவிடர் கழகம்.

## (The Thiruvidar Association.)

1. அவையின் நோக்கங்கள் (Objects of the Association.)

(அ) திருவிடரின் பழையவ ரலாறுகளையும் திருவிட மொழியின் உண்மை வரலாறுகளையும் ஆராய்ச்சி செய்தல்.

(ஆ) ஆராய்ச்சியிற் கண்டபொருளைத் தீர்மானிக்கக் கூட்டங்கூடிப் பேசல். அத்தீர்மானங்களை அச்சியற்றி உறுப்பினர்க்கும் உலகுக்கும் வெளிப்படுத்தல்.

(இ) அரிய பொருள்களைப்பற்றிப் பெருஞ்சொல் (பிரசங்கம்) இயற்றல் முதலிய செயல்களால் திருவிடரின் அறிவு ஒழுக்கம் ஒற்றுமை தெய்வக்கோள் சிக்கனம் ஊரான் உரிமைகளின் நிலைமையை வளர்த்தல்.

(ஈ) திருவிடர் பழைமைகளை நூல் மேற்கோளோடு கண்டுபிடித்துப் பண்டம் எழுதி இக்கழகத்துக் களிப்பவர்களுக்குப் பரிசளித்தல். கல்வித் துணைப்பொருள் தரல். தமிழ்மொழி வளர்தலுக்குரிய செயல்களைத் தேர்ந்து செயல்.

(உ) திருவிடர் வரலாறு மொழி முதலியன பற்றிய பெருஞ்சொல் பண்ட முதலியவற்றை அப்போதப்போதச் சியற்றிச்சுவடியாக வெளிப்படுத்தல்.

(ஊ) இக்கழகத்தில் அரசுக்கு மாறுன செயல் பேச்சு எழுத்து முதலியவற்றை நீக்கல் என்பன.

## குறிப்பு.

அ. (1.) திருவிடரின் பழையவரலாறுகளை ஆராய்தல்என்பது திருவிடநாட்டின் முற்கால பிற்கால நிலைமைகள் யாவை? திருவிடர் என்பவர் யாவர்? திருவிடர் தோற்றம் யாது? அன்னவர் அறிவு கைத்தொழில் செட்டு கடற்செலவு உரிமைமொழி நூல் தெய்வக்கோள் மணம் தூய்மை உணவு ஒழுக்கம் வழக்கம் அரசியல் அவைக்களம் சீர்த்தேற்றம் முதலியவை எத்தகையன என ஆய்தல்.

(2.) திருவிடமொழியின் உண்மைவரலாறுகளை ஆராய்தல்என்பது திருவிட மொழியாகிய தமிழின் தோற்றம் யாது? அதன் இயல்பு யாது? அது இயல்மொழியா செயல் மொழியா? அதன் வளர்ச்சி எவ்வாறு? அதினின்று தோன்றிய மொழிகள் எவை? அதிற் பிறமொழிகளின் கலப்புளதா? அவை யாவை? அதன் எழுத்தின் (இலக்கண) அமைப்பு எத்தகைத்தது? தமிழ்த் தொன்மை நூல்கள் யாவை? தமிழ்மொழியின் முதனிலைகள் (பகுதிகள்) எத்தகைத்தன? உலகிலுள்ள மொழிகள் அனைத்துக்கும் அல்லது ஒவ்வொருசிறந்த மொழிகளுக்கும் தமிழுக்கும் என்ன ஒற்றுமைகள் அல்லது வேற்றுமைகள் உள்ளன என்பது முதலியவற்றைப்பற்றி ஆய்தல்

## கட்டளைகள்.

2. கழகத்தலைவரும் துணைத்தலைவரும் துணை அமைச்சரும் பொருளாளரும் (Treasurer) ஈராண்டுக்கொருக்கால் பொதுக் கூட்டத்தில் கூடியவருட் பேரெண்கருத்து (Majority) ப்படி தேர்ந்தெடுக்கப்படுவர்.

3. சுவாமி, விருதை, சிவஞான யோகிகள் நிலையுற்ற அமைச்சர்.

4. பொதுக்கூட்டம் என்பதில் இக்கழகத்துள்ள எல்லா உறுப்பினரும் அடங்குவர்.

5. பொதுக்கூட்டம் கழகத்தின் நடவடிக்கைகளைப் பொதுப்பட மேற்பார்க்கும் உரிமையும் கழகத்தின் எல்லாத் தலைமைச் செயல்களிலும் முடிவான தீர்மானஞ் செய்யும் உரிமையும் உடையதாம்.

6. நிகழ்த்து கூட்டம் பேரவையால் தேர்ந்தெடுக்கப்பட்ட (துணைத்தலைவர் அமைச்சர் பொருளாளர் உட்பட) பத்துக்குமிக்காத உறுப்பினரையுடையதாம். அது பொதுக்கூட்டம் இது இது செய்யத்தக்கதென்று தீர்மானித்தவற்றைச் செய்துமுடிக்கும் கடமையுடையதாம்.

7. கழகத்தலைவர் பொதுக் கூட்டத்திலும் நிகழ்த்து கூட்டத்திலும் தலைமை பூண்பதோடு அவ்விரண்டினும். கிழமைக்குடவோலை (Casting vote) க்குரிமையுடையராவர். பொதுக் கூட்டத்துக்கு (General body) 25. உறுப்பினர்க்குக் குறையாமலும் நிகழ்த்து கூட்டத்துக்கு (Managing committee 5. உறுப்பினர்க்குக் குறையாமலும் சேர்ந்தால் நிறைவெண் (Quorum) ஆம்.

8. அமைச்சர் குறிகூட்டல் (Convening meeting) உறுப்பினராக வேண்டும் விண்ணப்பம் பெறல் ஆண்டறிக்கைத்தாள் (Annual report) வரைதல் சுவடி துண்டுத்தாள் முதலியன அச்சிட்டுப் பரப்பல் கழகநடவடிக்கைக்குரிய கடிதப் போக்குவரத்துச் செய்தல் முதலிய பணிகளை மேற்கொண்டு நடத்துவர்.

9. ஒவ்வொரு உறுப்பினரும் ஆண்டொன்றுக்கு உறுப்புமைக்காக ஒரு ரூபா கட்டணமாகச் (Subscription) செலுத்தவேண்டும். உறுப்பினர் தம் முளப்படி நன்கொடையாக எந்தத் தொகையுந் தரலாம்.

10. இக்கழகத்துக்கு ரூ100 அல்லது அதற்குமேல் நன்கொடை தருபவர் கழகக்காவலர் (Patron of the association) ஆவர்.

11. அயல்நாட்டுறுப்பினர் அஞ்சல் முதலியசெலவுக்கு அரை ரூபா தனிக் கட்டணம் மிகுதியாய் அனுப்பல்வேண்டும்.

12. உறுப்புமைக்காகச் செய்யப்படும் ஒவ்வொரு விண்ணப்பமும் டண்டங்களும், கடிதங்களும் அமைச்சருக்கனுப்பப்படல் வேண்டும்.

13. இக்கழகத்தின் பொதுக்கூட்டம் (பேரவை) ஆண்டுக் கொருதடவை நிகழ்த்து கூட்டத்தார் குறித்தவிடத்திற் கூடும். நிகழ்த்து கூட்டம் வேண்டும்போது கூடும்.

14. இக்கழகத்தில் இந்தியாவிலும் பருமா இலங்கை திரான்சுவால் முதலிய அயல் நாடுகளிலும் குடியேற்ற நாடுகளிலும் உள்ள தமிழ் பேசுந் திருவிடரும், தமிழின் பிள்ளைமொழிகளாகிய வடுகு கன்னடம் மலையாழம் துழுவம் முதலிய மொழிகள்பேசுந் திருவிடரும், மரபு நிறம் அல்லது தெய்வக்கோள் முதலிய வேற்றுமையின்றிப் பதினறுட்டைக்கு மேற்பட்டவர் எவரும் உறுப்பினராய்ச் சேரத்தக்கவராவர்.

15. இன்றியமையாததெனத் தோன்றும் பெருஞ்சொல் பண்டம் முதலியவற்றை ஆங்கிலம் அல்லது வேறுமொழிகளில் மொழி பெயர்த்து அச்சியற்றி வெளிப்படுத்தலாம்.

இக்கழகம் தோன்றியகாலம்—19—11—1908.

இங்ஙனம்,

விருதை சிவஞானயோகி,

கழக அமைச்சர்,

விருதுபட்டி, S. I. RY.

திருவன் S. வேதமூர்த்தி முதலியாரவர்கள், B. A., சென்னை.
,, P. M கைலாசம் பிள்ளையவர்கள், B.A., பிளீடர், திருநெல்வேலி.
,, A. சோணாசலம் பிள்ளையவர்கள், மிராசுதார் ஷை
,, நா. க. சட்டைநாதக்கவுராயாளரவர்கள், மிராசுதார், செங்கோட்டை.
,, A. ஐயம்பெருமாள் பிள்ளையவர்கள், L. M. & S., திருவனந்தபுரம்.
,, ராவ் பகதூர் P.I. சின்னசாமிபிள்ளையவர்கள், மிராசுதார், பாலக்காடு.
,, C. S. முத்துசாமி பிள்ளையவர்கள், பென்ஷன் போஸ்ட் மாஸ்டர், கொல்லம்.
,, S. முத்துசாமிக்கரையாளரவர்கள் B.A., மிராசுதார், செங்கோட்டை.
,, S குமாருபிள்ளையவர்கள், போலீசுஇன்ஸ்பெக்டர், திருவநந்தபுரம்.
,, P. ஜநார்த்தநம்பிள்ளையவர்கள், B. A., எக்சைசுஇன்ஸ்பெக்டர், கொல்லம்.
,, C. P. சுப்பையாபிள்ளையவர்கள் B A., பிளீடர், பாளயங்கோட்டை.
,, V. A. சொக்கலிங்கம்பிள்ளையவர்கள், B.A., சப்ரிஜிஸ்டிரார், வாழப்பாடி, சேலம்.
,, N. சுந்தரலிங்கசாமிக்காமயநாயக்கரவர்கள், மதுரை.
,, S. பழநியாண்டிமுதலியாரவர்கள், B.A., பிளீடர், பாளயங்கோட்டை.
,, M V. S. முத்தையபிள்ளையவர்கள், பிளீடர், கோவிற்பட்டி.
,, T. V. சுப்பிரமணியபிள்ளையவர்கள், மில்மானேஜர், ஷை
,, V. S. சுப்பையாபிள்ளையவர்கள், B.A., பிளீடர், ஷை
,, S. அப்பாவுபிள்ளையவர்கள், கண்டமநாயக்கனூர்.
,, S. குருகுகதாசபிள்ளையவர்கள், எட்டயபுரம்.
,, R. V. உலகநாதபிள்ளையவர்கள், ராஜபாண்டி, வீரகேரளம்புதூர்.
,, G. M. சுந்தரம்பிள்ளையவர்கள், பிளீடர், ஓட்டப்பிடாரம்.
,, தெ. ச. சுப்பிரமணியபிள்ளையவர்கள், சைவசித்தாந்தசபையமைச்சர், தூத்துக்குடி.
,, ச. கண்ணுயிரம்பிள்ளையவர்கள், பஞ்சுச்செட்டி, விருதுப்பட்டி.
,, இ கருத்தசாமித்தேவரவர்கள், பண்ணையார், விக்கிரமசிங்கபுரம்.
,, மு. அ. வாலையாநந்தசுவாமிகள், பாவவிநாசம்.
,, தையல்பாகம்பிள்ளையவர்கள், B.A., பிளீடர், ஸ்ரீவில்லிபுத்தூர்.
,, N. வெங்கடாசலம் பிள்ளையவர்கள், B.A., பிளீடர், ஸ்ரீவைகுண்டம்.
,, மு. கதிரேசச்செட்டியாரவர்கள், வித்வான், மகிபாலன்பட்டி.
,, பொ. முத்தைய பிள்ளையவர்கள், திருவாவடுதுறையாதீனம் சைவப்பிரசாரகர், தூத்துக்குடி.
,, S. இலட்சுமிநாராயண பிள்ளையவர்கள், B A., சப்ரிஜிஸ்டிரார், ஸ்ரீவில்லிபுத்தூர்.
,, V. தில்லைநாயக முதலியாரவர்கள், வித்வான், சிதம்பரம்.
,, க. சதாசிவ செட்டியாரவர்கள், B.A., சிவாகசியமொழிபெயர்ப்பாசிரியர், சென்னை.
,, சோமசுந்தரபாரதிகள், M. A. B. L. வக்கீல், தூத்துக்குடி.
,, S குமாரசுவாமி பிள்ளையவர்கள், B.A., பிளீடர், தூத்துக்குடி.
,, T. S. தியாகராஜ ஞானியார், கமலாசனிப்பத்திராதிபர், திருவாரூர்.
,, சிவப்பிரகாச சுவாமிகள், நொச்சியம், ஸ்ரீரங்கம்.
,, J. N. இராமநாதன் அவர்கள், சித்தாந்ததீபிகை எடிட்டர், சென்னை.
,, T. திருநாராயண பிள்ளையவர்கள், மிராசுதார், தென்பாதி, சீர்காழி.
,, T. A. முத்துச்சாமிக்கோனாரவர்கள், மிராசுதார், திருச்செங்கோடு.

# தமிழர் தொன்மை,

## அகவல்

ஒண்மை யறிவு மோர்வுமிக் கோரே
உண்மை கேண்மின் உண்மை கேண்மின்?
மீன்கொடி படைத்த மேன்மை மனுக்கள்
ஆன்ற பாண்டிய ரனைவருந் தமிழர்.
தெற்கட் பஃறுளி யாறு சீர்சால்
நற்புகழ் வடக்கண் நளிரிமை யார்மலை
வரைதமிழ் நாடா வயங்கிய முற்கால்
திருவிட மெனும்பே ரதற்குச் சிறந்தது.
பின்னா ரியர்கள் பிறங்கின் னாட்டில்
உன்னிவந் துகுடி யுறுமுன மிங்குத்
தமிழ்மொழி வழக்குந் தகையொண் ணூலும்
இமிழிசை யைந்திணை இனமுந் தேவும்
போற்றவர் யார்க்கும் பொதுச்சிவக் கோளும்
ஆற்றருந் தளியு மகத்தெண் ணெழுத்தும்
நயமிகு மொழுக்கமும் நனிச்சீர்த் தேற்றமும்
[illegible]ர்த்திருந் தனவற முனாற்றர சிருந்தது.
மற்றிவை யாவும் வான்றமிழ்ப் புலவர்
சொற்ற மொழிகள் தொகைப்படு வேதம்
ஆகமம் புராண மவிரிதி காசம்
வாகய லார்சொல் மருளி லாங்கிலக்
கற்றவர் கற்பொறி கவின்பந் தர்க்கார்
தத்தர் முன்னையர் தம்முறை வழியால்
துணியப் பட்டன. தொன்றீ ரினத்தில்
இணங்கா நாற்குல மியற்றினர் பின்னோர்.
என்னனு மொருதலை யிவையுண்
மன்னி யுணர்ந்து மயக்கொழி வீரே.

இப்பா 19—11—08 ல் திருக்குற்றாலத்திற் கூடிய கூட்டத்தில் சுவாமி, விருதை. சிவஞானயோகிகளாற் கூறப்பட்டது.